விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஊராட்சி ஒன்றியம் மயிலம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின்
நடடிக்கைகள்
முன்னிலை: திரு.அ.த.சிவக்குமார்

தீர்மான எண்:07/2024 நாள்:4.03.2024

பொருள்: உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு –விழுப்புரம் மாவட்டம் – மயிலம் ஊராட்சி ஒன்றியம் – மயிலம் ஊராட்சி – ச.எண் 35/5 ல 1.09 ஏக்கர் அல்லது 4400 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ குழந்தை வேலன் நகர் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழிலநுட்ப இறுதி ஒப்புதல் சார்பு

பார்வை: 1.திரு.ஆர்.நவநீதம், கன்னிகாபுரம் கிராமம் எனபவரின் கடித நாள்:14.12.2023

2.அரசாணை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்:04.05.2017

3. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் கடிதம் இணையதள வாயிலாக ITP6V2GZ/2024/TCP நாள்:05.02.2024

4.சார்பதிவாளர் , பதிவுத்துறை மயிலம் ஊராட்சி சார்பதிவாளர் அலுவலகம் ஆவண எண் 228/2024 நாள்:25.01.2024

5.நில பயன் மாற்று கட்டணம் செலுத்து சீட்டு நாள்:04.03.2024(Challan No:20240304004801) மற்றும் மயிலம் ஊராட்சி TN Pass கணக்கு எண்:7392993748 செலுத்தப்பட்ட நாள்:04.03.2024

.....

உத்தரவு:

விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஊராட்சி ஒன்றியம் மயிலம் ஊராட்சி ச.எண் 35/5 ல் 1.09 ஏக்கர் அல்லது 4400 ச.மீ பரப்பளவுடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ குழந்தை வேலன் நகர் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான பார்வை 1 மற்றும் பார்வை 2 ல கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 3 ன் படி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டுள்ளது. பார்வை 4 ன் கடிதத்தின் படி சாலை மறறம மூலை முடக்கு பொது இடத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஆவண எண் 228/2024 நாள்:25.01.2024 ல் தானமாக உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு அசல பத்திரம்பெறப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், பார்வை 5 ல் காணும் நிலப்பயன்மாற்றா கட்டணம் மற்றும் சந்தை மதிப்பில் 3% ரூ.19700/– கீழ்காணும் அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட இறுதி ஒப்புதல் ஆணைப்பிறப்பிக்கப்படுகிறது.

0217 Urban Development -60 other Urban Development Schemes -800 other Receits AS Receipts under use conversion Charges -27 Non Taxation Fees -09 Collection (DPC:0217-60-800-AS 22709)

மேலும், மயிலம் ஊராட்சி TN Pass கணக்கு எண:7392993748 ல் ரூ.24000/ வரவு வைக்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவிற்கு கீழ்காணும் மனைப்பிரிவு நிபந்தனையின் படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேலும் இணையதளம் வாயிலாக ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்திற்கு மேற்படி மயிலம் ஊராட்சி மனற தீர்மானஎண 07/2024 என எண்ணிடப்பட்டு அசல் வரைபடங்கள் மற்றும் ஒப்புதல் ஆணை நகல இதது டன் அனுப்பி வைக்கப்படுகிறது.

உள்ளாட்சியின் இறுதி ஒப்புதலுடன் அங்கீகரிப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட நகர் ஊரமைப்பு மற்றும் பத்திரபதிவு அலுவலத்திறகும் நில அளவை துறைக்கும் தகவலக்கும் உரிய நடவடிக்ககைக்காகவும் அனுப்பி வைக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்:

1.மனைப்பிரிவுகள் சாலைகள் அனைத்தும் மனைப்பிரிவு வரைபடத்தின்படி உள்ளாட்சி சட்டங்களின் படி சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைவிருத்தக்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும் பொது துறையில் இருந்து (Public Road) மனுதாரர் மனைப்பிரிவு அமைவும் இடம் வரை அணுகுசாலையாக காட்டப்பட்டுள்ள சாலைப்பகுதியை உள்ளாட்சி தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ளும்.

2.மனைப்பிரிவு வரைபடத்தின் மனைப்பிரிவு சாலையும் OSR மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் இருப்பின் அதனையும் அதனையும் மனைப்பிரிவு வரைபடம் மற்றும் தானபத்திர நகலுடன் சமமந்தபட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி வருவாய ஆவணங்களில உட்பரிவுடன தகுந்த பதிவுடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

3.நகர் ஊரமைப்பு அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில அலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது.

4.சாலையின் இருபுறங்களிலும் 10 அடி தூரத்திற்கு ஒரு மரம் நட்டு பராமதிக்கப்பட வேணடும்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விழுப்புரம் அவர்களின மண்டல அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட நிபந்தனைகளுக்கு மாறாக எந்தவித மாற்றமும் செய்யக்கூடாது என்றும், நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என பினனர் அறியப்பட்டால் (அ) மனைக்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் வழங்கியதில் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைகளுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனை அடிப்படையில் மனையினை அரசு விதிகளுக்குட்பட்டு மயிலம் ஊராட்சி ச.எண் 35/5 ல் 1.09 ஏக்கர் அல்லது 4400 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ குழந்தை வேலன் நகர் குடியிருப்பு சாதார வகை மனைகள் 24(மனை எண்கள் 1 முதல் 24 வரை) மனைகளுக்கு ஊராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு:வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்

ஊராட்சி மன்ற தலைவர்,
மயிலம் ஊராட்சி,
மயிலம் ஊராட்சி ஒன்றியம்

பெறுதல்:
திரு.ஆர்.நவநீதம் த/பெ ராதா
நெ.698 ஜி.எஸ்.டி சாலை கீழ் எடையாளம் மதுரா கன்னிகாபுரம்
திண்டிவனம் தாலுக்கா
விழுப்புரம் மாவட்டம்.

நகல்:சார்பதிவாளர், மயிலம் சார்பதிவாளர் அலுவலகம் தகவலுக்காக

நகல்:வட்டாட்சியர், திண்டிவனம் தகவலுக்காக அனுப்பப்படுகிறது..